FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364149

1 District மாவட்டம் சேலம் PS: காவல்நிலையம் சே.மா.க.பிரி Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 10/AC/2026 Date: நாள் 18.07.2026

2 (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988. Sections பிரிவுகள்: 7(a) & 7(b)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: as amended in 2018. Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3 (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.07.2026 Date to : நாள் வரை 17.00 மணிக்கு முன்பு.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.2026 Time : நேரம் 16.00 மணி.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III 18.07.2026. Time : நேரம் 16.00 மணி.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 70 கி.மீ மேற்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், தாரமங்கலம் வட்டம், சேலம் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. செல்லம்மாள்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெருமாள்.

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 21.05.1974

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் —

Place of Issue : வழங்கப்பட்ட இடம் —.

(f) Occupation : தொழில் தாசில் ஆய்வாளர்

(g) Address : முகவரி 22, பந்தரப்பு மற்றும் நன்காணிப்புப் பிரிவு சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form 91 மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

18/7/2026.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18/7/2026.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.07.2026 - 17.00மணி

Name: பெயர் M. நல்லம்மாள்
Rank: நிலை .....No. எண் .....
தலைமை காவலர்,
மு.த.கா. பிரிவு, சேலம்.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/AC/2026 u/s 7(a) & 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.7-ன் தொடர்ச்சி...

1. திரு.A முருகானந்தம் (வயது-49/2026),
த/பெ அர்த்தனாரிசாமி,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்.

2. திரு.M.காமராஜ் (வயது-45/2026),
த/பெ முருகேசன்,
கிராம நிர்வாக அலுவலர்,
சாத்தப்பாடி கிராமம்,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்.

3. திரு.A.மதியழகன் (வயது-49/2026),
த/பெ ஆனந்தன்,
பதிவறை எழுத்தர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்.

4. திரு.V.கண்ணையன் (வயது-41/2026),
த/பெ வெங்கடாசலம்,
வட்டத் துணை ஆய்வாளர்,
நில அளவைப்பிரிவு,
வட்டாட்சியர் அலுவலகம்,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்.

5. திரு.V.தேவராஜன் (வயது-37/2026),
த/பெ வடிவேல்,
குறுவட்ட நில அளவர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/AC/2026 u/s 7(a) & 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

ணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

சேலம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.மு.நல்லம்மாள் ஆகிய நான் 17.07.2026-ம் தேதி மாலை சுமார் 17.10 மணிமுதல் 23.00 மணி வரை சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 18.07.2026-ஆம் தேதி 16.00 மணிக்கு சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/AC/2026 u/s 7(a) & 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கு விபரம் பின்வருமாறு.

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் அவர்களும் மற்றும் அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் மற்ற அலுவலர்கள் தலைவாசல் வட்டத்தில் உள்ள பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாகவும் கையூட்டாக பணம் பெற்றுவருவதாக கிடைத்த நம்பத்தகுந்த இரகசிய தகவலின் அடிப்படையில் 17.07.2026-ம் தேதி, நான், காவல் ஆய்வாளர் திரு.நரேந்திரன் மேற்படி அரசு சாட்சிகள் திரு. மு. ஆனந்தராஜ், உதவி பொறியாளர், இயக்கமும் பராமரிப்பும், மரவனேரி பிரிவு, சேலம் மாவட்டம், மற்றும் திரு. ஷா. இம்ரான் பாஷா, முதுநிலை ஆய்வாளர், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம், சேலம் சரகம், சேலம் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவினருடன் சேலம் மாவட்டம், தலைவாசல், சேலம் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பாரதியார் மகளிர் பொறியியல் கல்லூரி எதிரில் செயல்பட்டு வரும் தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாலை 17.00 மணிக்கு செல்லப்பட்டது. அப்போது அலுவலகத்தின் வெளியே சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்றுகொண்டிருந்தவர்களை அலுவலகத்திற்குள் விசாரணையின் பொருட்டு அழைத்து செல்லப்பட்டது. மேலும் அலுவலகத்தினுள் உள்ளே இருந்தவர்களையும் வெளியே செல்லாவண்ணம் காவலர்களை கொண்டு காப்பு பணி நியமிக்கப்பட்டது. மேற்படி தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகமானது சேலம் to உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையின்

தெற்கு புறமாக அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்திற்குள் நுழைந்ததும் அலுவலக கட்டிடத்திற்கு முன் ஒரு வராண்டா அமைந்துள்ளது. மேற்படி அலுவலகமானது கீழ்தளம் கொண்டதாகும், முதல் தளம் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருந்தது. அந்த அலுவலகத்தின் கீழ்த்தளத்தில் உள்ள பிரதான நுழைவாயிலில் நுழைந்ததும் வடமேற்கு மூலையில் ஒரு வரவேற்பு அறை அமைக்கப்பட்டு இருந்தது, அப்போது அந்த வரவேற்பு அறையில் நபர்கள் யாரும் இல்லை. அதற்கு அடுத்து கிழக்கு பார்த்த வாயில் கதவு கொண்ட வட்டாட்சியர் பொதுப்பிரிவு அலுவலக அறை அமைந்திருந்தது. வட்டாட்சியர் பொதுப்பிரிவு அலுவலகத்தினுள் சென்று, வட்டாட்சியர் அவர்களின் அறைக்கு சென்று பார்த்தபோது அவர் இல்லை. பின்னர் அலுவலகத்தில் இருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரிடம் காவல் ஆய்வாளர் தன்னையும் தன்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்துகொண்டு அவரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.அ.முருகானந்தம் என்றும் தான் நேற்று 16.07.2026-ம் தேதி முதல் இவ்வலுவலகத்தில் தலைமை இடத்து துணை வட்டாட்சியர் ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். வட்டாட்சியர் குறித்துகேட்டபோது, திரு.K.ஜெயகுமார் அவர்கள் தற்பொழுது வட்டாட்சியர் ஆக பணிபுரிந்து வருவதாகவும், அவர் இன்றைய தினம் திரு.காசிமணி என்ற முன்னாள் அலுவலக உதவியாளர் அவர்கள் மீது சிட்பண்ட் நிறுவனம் தொடர்ந்த வழக்கில் சாட்சியம் வழங்க தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்திற்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். பின்னர் திரு.அ.முருகானந்தம் அவர்களை சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,690/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்டபோது அந்தத் தொகை தனது சொந்த பணம் என்றும் சொந்த செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் சொன்ன காரணம் ஏற்றுக்கொண்டு மேற்படி தொகையை சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது அறை முழுவதும் சோதனை செய்ததில் சந்தேகப்படும்படியாக வேறு ஆவணங்களோ, பணமோ, பொருளோ இல்லை. அவரது கைபேசியில் UPI Transaction குறித்து ஆய்வு செய்தபோது அவருடைய போன் எண் 9994805235-க்கு உரிய UPI ID– 9994805235@ybl- ல் 03.05.2025-ம் தேதி முதல் 09.07.2026-ம் தேதி வரை பல்வேறு VAO மற்றும் Arivu A6 மற்றும் சில பெயர்களில் சந்தேகப்படும்படியாக பணம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு இந்த காலகட்டத்தில் மொத்தம் ரூ.1,48,188/- பெறப்பட்டுள்ளது. அந்த பரிவர்த்தனை விபரம் உள்ள திரை Screen Shot எடுக்கப்பட்டு பிரின்ட் எடுக்கப்பட்டு அரசு சாட்சிகளிடமும், திரு.முருகானந்தம் அவர்களிடம்

கையொப்பம் பெறப்பட்டு, நானும் கையொப்பம் செய்து தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. பின்னர் அவரை அழைத்துக்கொண்டு பொதுப்பிரிவில் இருந்த நபர்கள் மற்றும் இருக்கையில் பணிசெய்துகொண்டிருந்த அலுவலர்கள் ஒவ்வொருவராக சோதனை செய்யப்பட்டது. அந்த அறையில் முன் இருக்கையில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் மதியழகன் என்றும், தான் இந்த அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அவரது சட்டை பையில் ரூ.50/- இருந்தது. அந்த பணம் ரூ.50/- அவரது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த தொகை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அவரது இருக்கை முழுவதும் சோதனை செய்தபோது அவரது மரடேபிளின் வலதுபக்க டிராவில் ரூ.2,000/- (500 x 4) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்டபோது அந்த தொகை வீட்டு செலவிற்காக வைத்துள்ள தொகை என்று தெரிவித்தார். அந்த தொகை எவ்வாறு அங்கு வந்தது என்று கேட்டதற்கு தான் வீட்டில் இருந்து எடுத்துவந்த தொகைதான் என்று சொன்னார். ஆனால் அந்த தொகையை அவர் வைத்திருந்த விதம் சந்தேகப்படும்படியாக இருந்ததால் அந்த தொகை ரூ.2,000/- அவர் அவரது அலுவலக பணியை செய்வதற்காக கையூட்டாக பெற்றிருக்குகூடும் என்பதற்கான முகாந்திரம் இருந்ததால் தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. மேலும் அவரின் மொபைல் போனில் இருந்த UPI Transaction குறித்து ஆய்வு செய்தபோது அவருடைய போன் எண் 8838273649-க்கு உரிய UPI ID–8838273649@ibl- ல் பிப்ரவரி 2026 முதல் ஜூலை 2026 வரை சில பெயர்களில் சந்தேகப்படும்படியாக பணம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு இந்த காலகட்டத்தில் மொத்தம் ரூ.2,41,977/- பெறப்பட்டுள்ளது. அதுகுறித்து கேட்டபோது அவர் எதுவும் கூறாமல் அமைதியாக இருந்தார். அந்த பரிவர்த்தனை விபரம் உள்ள திரை Screen Shot எடுக்கப்பட்டு பிரின்ட் எடுக்கப்பட்டு அரசு சாட்சிகளிடமும், திரு.மதியழகன் அவர்களிடமும் கையொப்பம் பெறப்பட்டு, நானும் கையொப்பம் செய்து தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. அந்த அறையில் இருந்த மற்ற அலுவலர்கள் ஒவ்வொருவராக சோதனை செய்து விசாரித்துக்கொண்டிருந்தபோது, அங்கிருந்த ஒரு நபர் அவர் வைத்திருந்த பையை அலுவலக ஜன்னல் வழியாக வெளியே தூக்கி எறிந்துவிட்டார். அந்த நபரை பற்றி விசாரித்த போது அவர் தனது பெயர் காமராஜ் என்றும், தான் சாத்தப்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சாட்சிகள

முன்னிலையில் சோதனை செய்தபோது அவரிடம் 70 ரூபாய் இருந்தது. மேலும் அவரால் ஜன்னல் வழியாக தூக்கி எறியப்பட்ட மஞ்சள் நிற பையை காவலர் உதவியுடன் சாட்சிகள் முன்னிலையில் எடுத்துவந்து சோதனை செய்த போது அந்த பையில் 500 ரூபாய் நோட்டுகள் ஒன்பது எண்ணிக்கையில் ஆக மொத்தம் 4,500 இருந்தது. மேலும் அந்த பையில் அவர் பணிசெய்யும் கிராமம் சம்பந்தப்பட்ட ஜமாபந்தியில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் சில ஆவணங்கள் இருந்தன. மேற்படி தொகையை எதற்காக தூக்கி எறிந்தீர்கள் என்று கேட்டபோது அவர் பதட்டத்தில் தூக்கி எறிந்ததாகவும், அந்த பையில் இருந்த தொகை குறித்து கேட்டபோது மகனுக்கு சைக்கிள் வாங்க வீட்டில் இருந்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாமலும், அவரது நடவடிக்கைகள் சந்தேகப்படும்படியாக இருந்ததால் அந்த தொகை ரூ.4,500/- அவர் அவரது அலுவலக பணியை செய்வதற்காக பெற்ற கையூட்டாக இருக்கக்கூடும் என்பதற்கான முகாந்திரம் இருந்ததால் தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. அவரது சட்டை பையில் வைத்திருந்த ரூ.70/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் இருந்த மற்ற அலுவலர்கள், தனிநபர்கள் மற்றும் மேற்படி அறையை சோதனை செய்ததில் சந்தேகப்படும்படியான வேறு பொருட்களோ ஆவணங்களோ கிடைக்கப் பெறவில்லை. மேலும் அந்த அலுவலகத்தின் கீழ்தளத்தில் உள்ள மற்ற அலுவலக அறைகள், அந்த அறைகளில் இருந்த அலுவலர்கள் ஆகியோர்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்து விசாரித்ததில் சந்தேகப்படும்படியான வேறு பொருட்களோ ஆவணங்களோ கிடைக்கப் பெறவில்லை. பின்னர் அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள அலுவலக அறைகள் மற்றும் அலுவலர்களை சோதனை செய்து விசாரித்ததில் வட்டத் துணை ஆய்வாளர் நில அளவை பிரிவு என்ற அறையில் இருந்தவரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் கண்ணையன் என்றும் தான் வட்டத் துணை ஆய்வாளராக தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று தான் அறிக்கை செய்து கொண்டதாகவும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த தொகை பற்றி விசாரித்த போது அவர் அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூபாய் 2,450 எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகை குறித்து அவரிடம் விசாரித்த போது தனது அம்மாவிற்கு மருந்து வாங்குவதற்காகவும், சொந்த செலவிற்காகவும் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருந்த காரணத்தினால் சாட்சிகள் முன்னிலையில் மேற்படி தொகையினை திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது கைபேசியில் UPI Transaction குறித்து ஆய்வு செய்தபோது அவருடைய போன் எண்

9940974090-க்கு உரிய UPI ID–Kannaiyanjesh@oksbi- ல் ஜனவரி 2026 முதல் ஜூலை 2026 முடிய சில பெயர்களில் சந்தேகப்படும்படியாக பணம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு இந்த காலகட்டத்தில் மொத்தம் ரூ.4,28,433/- பெறப்பட்டுள்ளது. அவரிடம் அதுகுறித்து கேட்டபோது அவை தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து பெறப்பட்டது என்று தெரிவித்தார். அந்த பரிவர்த்தனை விபரம் உள்ள திரை Screen Shot எடுக்கப்பட்டு பிரின்ட் எடுக்கப்பட்டு அரசு சாட்சிகளிடமும், திரு.கண்ணையன் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு, நானும் கையொப்பம் செய்து தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. மேலும் சர்வே பிரிவில் இருந்த குறுவட்ட நிலஅளவர் ஆக பணிபுரிந்து வரும் திரு.தேவராஜன் அவர்களை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்த போது அவரிடம் ரூ.300/- இருந்தது. அந்த தொகையானது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். மேற்படி தொகையை சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது கைபேசியில் UPI Transaction குறித்து ஆய்வு செய்தபோது அவருடைய போன் எண் 9500851537-க்கு உரிய UPI ID–devarajjmsc-2@okhdfcbank- ல் ஜூன் 2026 மற்றும் ஜூலை 2026 முடிய சில பெயர்களில் சந்தேகப்படும்படியாக பணம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு இந்த காலகட்டத்தில் மொத்தம் ரூ.32,900/- பெறப்பட்டுள்ளது. அவரிடம் அதுகுறித்து கேட்டபோது அவை தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து பெறப்பட்டது என்று தெரிவித்தார். அந்த பரிவர்த்தனை விபரம் உள்ள திரை Screen Shot எடுக்கப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டு அரசு சாட்சிகளிடமும், திரு.தேவராஜன் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு, நானும் கையொப்பம் செய்து தொடர் விசாரணைக்காக கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. மேலும் முதல் தளத்தில் உள்ள அனைத்து இடங்களும் சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்த வகையில் கைப்பற்றும் படியான எந்த ஆவணங்களும் பொருட்களும் காணப்படவில்லை. மேலும் திரு.முருகானந்தம்-தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திரு.கண்ணையன் - வட்ட துணை அளவர், திரு.மதியழகன் - பதிவறை எழுத்தர், திரு.காமராஜ், கிராம நிர்வாக அலுவலர், சாத்தப்பாடி கிராமம் மற்றும் திரு.தேவராஜன் - குறுவட்ட நில அளவர் ஆகியோரை விசாரித்து அரசு சாட்சிகள் முன்னிலையில் தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. அந்த திடீர் தணிக்கை 17.07.2026 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் தணிக்கை குறித்து தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கையில், நானும், காவல் ஆய்வாளர் திரு.நரேந்திரன், அரசு சாட்சிகள் ஆகியோர் கையொப்பம் செய்து, தலைமையிடத்து

துணை வட்டாட்சியர் திரு.முருகானந்தம், வட்ட துணை அளவர் திரு.கண்ணையன், பதிவறை எழுத்தர் திரு.மதியழகன், கிராம நிர்வாக அலுவலர் திரு.காமராஜ், குறுவட்ட நில அளவர் திரு.தேவராஜன் மற்றும் சமூக பாதுகாப்புத்திட்ட தனிவட்டாட்சியர் திரு.S.கந்தமூர்த்தி ஆகியோர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. அந்த செயல்முறை நடவடிக்கையின் நகல் ஒன்று தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.முருகானந்தம், வட்ட துணை அளவர் திரு.கண்ணையன், பதிவறை எழுத்தர் திரு.மதியழகன், கிராம நிர்வாக அலுவலர் திரு.காமராஜ், குறுவட்ட நில அளவர் திரு.தேவராஜன் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. மேற்படி தினசரி தணிக்கையின்போது பதிவறை எழுத்தர் திரு.மதியழகன், கிராம நிர்வாக அலுவலர் திரு.காமராஜ் ஆகியோர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தொகை அவர்களால் கையூட்டாக பெற்ற பணம் என்பதற்கான முகாந்திரம் இருப்பதும், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.முருகானந்தம், வட்ட துணை அளவர் திரு.கண்ணையன், பதிவறை எழுத்தர் திரு.மதியழகன், மற்றும் குறுவட்ட நில அளவர் திரு.தேவராஜன் ஆகியோர்களின் UPI Transaction குறித்த விபரங்கள் அந்த அலுவலர்கள் தங்கள் அலுவலக பணியை செய்வதற்கு கையூட்டாகவோ அல்லது அவர்களால் செய்யப்பட்ட பணிக்கு வெகுமதியாகவோ அந்த தொகைகளை பொதுமக்களிடமிருந்தும், அவர்களுக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்கள் மூலமாகவும் பெற்றிருக்ககூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.முருகானந்தம், வட்ட துணை அளவர் திரு.கண்ணையன், பதிவறை எழுத்தர் திரு.மதியழகன், கிராம நிர்வாக அலுவலர் திரு.காமராஜ், மற்றும் குறுவட்ட நில அளவர் திரு.தேவராஜன் ஆகியோர்களின் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று இன்று 18.07.2026-ம் தேதி 16.00 மணிக்கு எதிரிகள் 1) திரு.A.முருகானந்தம் (வயது-49/2026), த/பெ அர்த்தனாரிசாமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம். 2) திரு.M.காமராஜ் (வயது-45/2026), த/பெ முருகேசன், கிராம நிர்வாக அலுவலர், சாத்தப்பாடி கிராமம், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம், 3) திரு.A.மதியழகன் (வயது-49/2026), த/பெ ஆனந்தன், பதிவறை எழுத்தர், வட்டாட்சியர் அலுவலகம், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் 4) திரு.V.கண்ணையன் (வயது-41/2026), த/பெ வெங்கடாசலம், வட்டத் துணை ஆய்வாளர், நில அளவைப்பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், தலைவாசல் வட்டம்,

சேலம் மாவட்டம். 5) திரு.V.தேவராஜன் (வயது-37/2026), த/பெ வடிவேல், குறுவட்ட நில அளவர், வட்டாட்சியர் அலுவலகம், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் ஆகிய அலுவலர்கள் மீது சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/AC/2026 u/s 7(a) & 7(b) of the Prevention of Corruption Act. 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை மற்றும் மேற்படி குற்ற அலுவலர்களின் வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(M.நல்லம்மாள்) 8/07/2026
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.